# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

# பாராளுமன்றம்

---

# 1990 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உள்ளூர் அதிகார சபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்

---

*[1990 யூன் மாதம் 29 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

---

1990 யூன் மாதம் 29 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

ரூபா 1.00

விலை: சதம் 60

1990 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உள்ளூர் அதிகார சபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்

[1990 ஆம் ஆண்டு யூன் மாதம் 29 ஆந் தேதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]

ச. வ. ஓ—15/84

பொது ஒழுங்கமைதி காரணமாகக் குறித்த சில மாநகரசபைகளுக்கும், நகரசபைகளுக்கும், பிரதேசசபைகளுக்குமான தேர்தல்கள் பின்போடப் பட்டுள்ளவிடத்து அத்தகைய சபைகளுக்கான புதிய நியமனங்களைக் கோருவதற்கும் தேர்தல்கள் நடாத்துவதற்கும் அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கும் ஏற்பாடுசெய்வதற்கானதொரு சட்டம்.

இலங்கையின் எல்லா மாநகரசபைகளுக்கும், நகரசபைகளுக்கும் அத்துடன் பிரதேச சபைகளுக்குமான தேர்தல்கள் தொடர்பில் நியமனங்கள் பெற்றுக்கொள்ளப்படுமென உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 26 ஆம் பிரிவின்கீழ் அறிவித்தல்கள் வெளியிடப் பட்டுள்ளதாலும் ; முன்னுரை.

இரண்டு மாநகரசபைகள், நான்கு நகரசபைகள் அத்துடன் முப்பத்தாறு பிரதேச சபைகள் தொடர்பில் நியமனங்கள் எதுவும் பெற்றுக் கொள்ளப்படாதுள்ளதாதலாலும்:

எட்டு மாநகரசபைகள், முப்பது நகரசபைகள் அத்துடன் நூற்றி ஐம்பத்திமூன்று பிரதேசசபைகள் விடயத்தில் தேர்தல்களில் போட்டி யேற்பட்டுள்ளமையினாலும் அத்துடன் உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின்கீழ் செய்யப்பட்ட அறிவித்தல்கள் மூலம் இந்த மாநகரசபைகள், நகரசபைகள் அத்துடன் பிரதேச சபைகள் என்பவற்றிற்கான தேர்தல் வாக்கெடுப்புத் தேதி 1987 ஓகத்து 15 ஆம் தேதிக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்ததாதலாலும்;

மேற்சொல்லப்பட்ட எட்டு மாநகரசபைகளின், முப்பது நகரசபைகளின் அத்துடன் நூற்றி ஐம்பத்தி மூன்று பிரதேசசபைகளின் தேர்தல்களுக்காக நிர்ணயிக்கப்பட்ட வாக்கெடுப்புத் தேதி பொது ஒழுங்கமைதி காரணமாகப் பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளினால் பின்போடப்பட்டுள்ளதாதலாலும்;

மேற்சொல்லப்பட்ட எட்டு மாநகரசபைகள், முப்பது நகரசபைகள் அத்துடன் நூற்றி ஐம்பத்திமூன்று பிரதேச்சபைகள் தொடர்பில் நியமனங்கள் சமர்ப்பிக்கப்பட்டதிலிருந்தான காலப்பகுதி காலாவதி ஆகி விட்டதன் காரணமாக அத்தகைய மாநகரசபைகள், நகரசபைகள் அத்துடன் பிரதேசசபைகள் தொடர்பில் புதிய நியமனங்களைக் கோருவதற்கு ஏற்பாடுசெய்வதும் மேற்சொல்லப்பட்ட எட்டு மாநகரசபைகள், முப்பது நகரசபைகள் அத்துடன் நூற்றி ஐம்பத்திமூன்று பிரதேசசபைகள் தொடர்பாகவும் அத்துடன் இந்த முன்னுரையில் இரண்டாம் பந்தியில்

குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள மாநகரசபைகள், நகரசபைகள் அத்துடன் பிரதேசசபைகள் தொடர்பில் நியமனங்கள் எதுவும் ஏற்கப்படவில்லையோ அந்த மாநகரசபைகள், நகரசபைகள் அத்துடன் பிரதேசசபைகள் தொடர்பாகவும் தேர்தல்களை நடாத்த ஏற்பாடுசெய்வதும் அவசியமாகி யுள்ளதாதலாலும்;

ஆகவே இப்பொழுது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயர்.

1. இச்சட்டம் 1990 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

குறித்த சில மாநகரசபைகள், நகரசபைகள் அத்துடன் பிரதேசசபைகள் தொடர்பில் சமர்ப்பிக்கப் பட்ட நியமனங்கள் வழங்கப் பட்ட வைப்புப் பணங்கள் சம்பந்தமான ஏற்பாடுகள்.

2. (1) கட்டளைச்சட்டத்தின் 26 ஆம் பிரிவின்கீழ் வெளியிடப்பட்ட அறிவித்தல்களைத் தொடர்ந்து 1988 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க உள்ளூர் அதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் அட்டவணைகள் II, III அத்துடன் IV இல் குறித்துரைக்கப்பட்ட மாநகரசபைகளுக்கான, நகரசபைகளுக்கான அத்துடன் பிரதேச சபைகளுக்கான தேர்தல்கள் தொடர்பில், கட்டளைச்சட்டத்தின் 28 ஆம் பிரிவின்கீழ் சமர்ப்பிக்கப்பட்ட நியமனப்பத்திரங்கள் வலுவில்லாமலும் பயனுடையதில்லாமலும் இருப்பதாகவும் அத்துடன் அத்தகைய நியமனப்பத்திரங்கள் ஒருபோதும் சமர்ப்பிக்கப்படவில்லை என்றுற்போன்றும் இத்தால் கருதப்படுகின்றன.

(2) 1988 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க உள்ளூர் அதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் அட்டவணைகள் II, III அத்துடன் IV இல் குறித்துரைக்கப்பட்டுள்ள மாநகரசபைகளுக்கான, நகரசபைகளுக்கான அத்துடன் பிரதேச சபைகளுக்கான தேர்தல்கள் தொடர்பில், கட்டளைச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின்கீழ் வெளியிடப்பட்டுள்ள அறிவித்தல்கள் இத்தால் இல்லாதொழிக்கப்படுகின்றன.

(3) 1988 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் அட்டவணைகள் II, III அத்துடன் IV இல் குறித்துரைக்கப்பட்டுள்ள ஏதேனும் மாநகரசபைகளுக்கான, நகரசபைகளுக்கான அல்லது பிரதேச சபைகளுக்கான தேர்தலுக்கு சுயேச்சைக்குழு ஒன்றினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட வேட்பாளர்கள் தொடர்பில் கட்டளைச்சட்டத்தின் 29 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட வைப்புப்பணங்கள், கட்டளைச்சட்டத்தின் 30 ஆம் பிரிவுக்கு முரணாக ஏது எவ்வாறிருப்பினும் வைப்புப்பணம் எவ்வாளினால் வழங்கப்பட்டதோ அவ்வாள் கட்டளைச்சட்டத்தின் 30 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் கீழ் அவருக்கு வைப்புச் செய்யப்பட்ட தேதியிலிருந்து அது மீளளிக்கப்படும் தேதி வரையிலான காலப்பகுதிக்கு அக் கட்டுப்பணத்தின்மீது ஆண்டொன்றுக்குப் பன்னிரண்டு சதவீதம் என்ற வீதத்திலான வட்டியுடன் சேர்த்து அவ்வாளுக்கு மீளளிக்கப்படுதல் வேண்டும்.

3. (அ) 1988 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க உள்ளூர் அதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் அட்டவணைகள் II அத்துடன் III இல் குறித்துரைக்கப்பட்டனவும் அவற்றின் உறுப்பினர்களின் பதவிக்காலம் 1991 சனவரி 01 ஆம் தேதியன்று அல்லது எழுத்திலான சட்டத்தின் கீழ் நியமிக்கப்படக்கூடிய வாறான அத்தகைய முந்திய ஒரு தேதியன்று முடிவடைய இருப்பவையுமான மாநகரசபைகளுக்கும் அத்துடன் நகர சபைகளுக்கும் கட்டளைச்சட்டத்தின்கீழ் தேர்தல்களை நடாத்துவதற்கும் ;

குறித்த சில மாநகரசபைகளுக்கு நகர சபைகளுக்கு அத்துடன் பிரதேசசபைகளுக்கு தேர்தல்கள் நடாத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்தல்.

(ஆ) 1988 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க உள்ளூர் அதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் அட்டவணை IV இல் குறித்துரைக்கப்பட்டனவும் அதன் உறுப்பினர்களின் பதவிக் காலம் 1991 சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது எழுத்திலான சட்டத்தின்கீழ் நியமிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முந்திய ஒரு தேதியன்று தொடங்க இருப்பவையுமான பிரதேச சபைகளுக்கு கட்டளைச்சட்டத்தின்கீழ் தேர்தல்களை நடாத்துவதற்கும் ;

(இ) 1988 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க உள்ளூர் அதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின்கீழும் கட்டளைச்சட்டத்தின் கீழும் அச்சட்டத்தின் அட்டவணை V இல் குறித்துரைக்கப்பட்ட மாநகரசபைகளுக்கும், நகரசபைகளுக்கும் அத்துடன் பிரதேசசபைகளுக்கும் தேர்தல்களை நடாத்துவதற்கும்,

நடவடிக்கைகள் தொடங்கப்படுதல் வேண்டும்.

4. இச்சட்டத்தின் 2 ஆம் அத்துடன் 3 ஆம் பிரிவுகளில் "கட்டளைச் சட்டம்" என்பது உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டம் அத்தியாயம் (262) எனப் பொருள்படும்.

பொருள்கோடல்.

5. (1) (அ) 1987 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்தால் திருத்தப் பட்டவாறான உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தைப் பின்பற்றி அல்லது பின்பற்றியதாகக் கருதி ; அத்துடன்

1987 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்கச் சட்டத்தின்கீழ் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் செல்லுபடியானதாதல்.

(ஆ) இதனகத்துப்பின்னர் "இயைபான காலப்பகுதி" எனக் குறிப்பீடுசெய்யப்படும் 1987 ஏப்பிறல் 16 ஆம் தேதிக்குப் பிறகு அத்துடன் 1987 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்தின் 1 பிம் பிரிவின்கீழ் செய்யப்பட்ட கட்டளையால் நியமிக்கப்பட்ட தேதிக்கு முன்.

மாநகரசபையொன்றுக்கு, நகரசபையொன்றுக்கு அல்லது பிரதேசசபையொன்றுக்கு நடாத்தப்பட்ட ஒவ்வொரு தேர்தலும் அல்லது செய்யப்பட்ட வெளிப்படுத்துகை அல்லது செய்யப்பட்ட நடவடிக்கை அத்தகைய தேர்தல் நடாத்தப்பட்ட, அத்தகைய வெளிப்படுத்துகை செய்யப்பட்ட அல்லது அத்தகைய நடவடிக்கை செய்யப்பட்ட தேதியன்று 1987 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டம் நடைமுறையில் இருந்தாற்போன்று, எல்லா நோக்கங்களுக்காகவும் செல்லுபடியானதாகவும் பயனுடையதானதாகவும் இருப்பதாகவும் இருக்கவேண்டுமென்றும் கருதப்படுதல் வேண்டும்.

(2) 1987 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்தால் திருத்தப்பட்டவாறான உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளைப் பின்பற்றி அல்லது பின்பற்றியதாகக் கருதி, இயைபான காலப்பகுதியின் போது எவரேனும் பகிரங்க அலுவலரால் செய்யப்பட்ட அல்லது அவரால் செய்யப்படாமற் தவிர்க்கப்பட்ட ஏதேனும் நன்னோக்கத்துடனான செயலுக்காக அவருக்கெதிராகக் குற்றவியல் நடவடிக்கைகள் எதுவும் தொடரப்படவோ அல்லது நிலைநாட்டப்படவோ கூடாது.

**ஒவ்வாமை விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.**

6. இச்சட்டத்தின் சிங்களம், தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை காணப்படும் சந்தர்ப்பத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.